*2018 ஜனவரி 12*]

# 2. தகவல் கோரல்

## (அ) தூத்துக்குடி தொகுதி, விசைப் படகு மீனவத் தொழிலாளர்கள் பாதிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன் அவர்கள்.*

**திருமதி பி. கீதா ஜீவன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி தொகுதியில் விசைப் படகுகள் கடந்த நான்கு மாதக்காலமாக கடலுக்குச் செல்லாமல் இருப்பதால் விசைப் படகுகளில் பணிபுரிந்து வந்த சுமார் 3,000–க்கும் மேற்பட்ட மீனவத் தொழிலாளர்கள் வேலைவாய்ப்பின்றி அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு மிகவும் சிரமப்பட்டு வருகிறார்கள். அதில் சில மீனவர்கள் வேலை தேடி பிற மாவட்டங்களுக்குச் சென்றுள்ளனர். அப்படி கன்னியாகுமரிக்குச் சென்றவர்களில்தான் 5 மீனவர்கள் ஒகி புயலில் சிக்கி உயிரிழந்துள்ளனர். மீன்பிடித் தொழிலை சார்ந்திருக்கக்கூடிய ஏற்றுமதி உள்ளிட்ட அனைத்துத் தொழில்களும் மாநகரத்தில் முடங்கியுள்ளன. மீன்பிடித் தொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் இணை இயக்குநர் பேச்சுவார்த்தை நடத்தியும் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவில்லை. ஆகவே, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் சிறப்புக் கவனம் செலுத்தி, இதற்குத் தீர்வு காண வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்து அமைகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

*முற்பகல் 11–35*

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடல் ஒழுங்குமுறைச் சட்டம், 1983–ன்படி தற்போது நம்முடைய கடற்கரையில் விசைப் படகுகள், கட்டுமரங்கள், வல்லங்கள் உட்பொருத்திய, வெளிபொருத்திய இயந்திரங்கள் பொருத்தப்பட்ட மீன்பிடிக் கலன்களெல்லாம் தொழிலை அமைதியான முறையில் செய்து கொண்டிருக்கின்றன.*

இதில் அரசுக்கு மாறுபட்ட கருத்து எதுவும் கிடையாது. தூத்துக்குடி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், 4 ஆயிரம் நாட்டுப் படகுகள், 400 விசைப் படகுகள் உள்ளன. அந்த 400 விசைப் படகுகளில் 150 படகுகள் ஆழ்கடலுக்குச் சென்று மீன்பிடிக்கின்ற tuna படகுகள் ஆகும். 4 ஆயிரம் நாட்டுப் படகுகள் மீன் பிடிப்புக்குச் சென்று கொண்டிருக்கின்றன; 250 விசைப் படகுகள் மீன்பிடிக்கச் சென்று கொண்டிருக்கின்றன. தற்போது 150 படகுகள் மட்டும்தான் இந்தப் பிரச்சினையில் உள்ளன. இதிலே எங்களுக்கு மாறுபட்ட கருத்து எதுவுமில்லை. மீனவர்கள் அண்ணன், தம்பி போன்றவர்கள். விசைப் படகு மீனவர் அண்ணன் என்றால், நாட்டுப் படகு மீனவர் தம்பி. இந்த இருவரும் ஒருமித்த கருத்து எடுத்து, ஒற்றுமையோடு நாங்கள் தொழில் செய்கிறோம் என்று சொன்னால், அவர்கள் தொழில் செய்வதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு அரசு தயாராக இருக்கிறது.

சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததுபோல் ஏற்கெனவே இதுகுறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்த கருத்துருவின் அடிப்படையில் ஒரு கூட்டம் நடத்தப்பட்டது. அதனடிப்படையில் 4 நாட்கள் மீன் பிடிக்கச் சென்றார்கள். ஆனால், மீண்டும் 4 ஆயிரம் நாட்டுப் படகு மீனவர்கள் மற்றும் வல்லங்கள் இயக்குபவர்கள் எதிர்ப்பு தெரிவித்ததன் காரணமாக தற்போது அவர்கள் கடலுக்குச் செல்ல முடியாத சூழ்நிலையில் இருக்கிறார்கள். ஆழ்கடலுக்குச் சென்று மீன் பிடிக்கின்ற 150 tuna விசைப் படகு மீனவர்கள் தற்போது மதுரை உயர் நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள். நீதிமன்றத்திலிருந்து என்ன ஆணை வருகிறதோ, அதையும் நாங்கள் observe செய்துவிட்டு, அதற்கேற்றபடி நடவடிக்கை எடுக்கத் தயாராகயிருக்கின்றோம். இருப்பினும், சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய நியாயமான கோரிக்கையை ஏற்று, நீதிமன்ற உத்தரவு எந்த அடிப்படையில் வருகிறது என்பதைப் பார்த்து, அதன் பிறகு மீண்டும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள்மூலம் இருதரப்பையும் அழைத்துப் பேசி, ஒரு சுமுக முடிவு எட்டலாம் என்கின்ற ஒரு எண்ணம்கூட இருக்கின்றது. இதில் எங்களுக்கு மாறுபட்ட கருத்து கிடையாது. அனைவரும் ஒருமித்த கருத்தோடு மீன்பிடித் தொழில் செய்தால் மிகவும் நல்லது. ஒருமித்த கருத்து வரும்போது நிச்சயமாக அதை நடைமுறைப்படுத்துவதற்குத் தயாராகயிருக்கின்றோம்.

*2018 ஜனவரி 12]* [*திரு. டி. ஜெயக்குமார்*]

*ஆழ்கடல் மீன்பிடிப்பு வளர்ந்து வருகின்ற தற்போதைய சூழ்நிலையில், பொதுவாகவே அண்மைக் கடல் மீன்பிடிப்பு* (offshore fishing) *என்பது குறைந்துகொண்டே வருகின்ற ஒரு நிலை இருக்கின்றது. எனவே, ஆழ்கடலுக்குச் சென்று மீன் பிடிக்கின்ற சூழ்நிலைக்கு நம்முடைய மீனவர்கள் தங்களைத் தயார்படுத்திக்கொள்ள வேண்டுமென்பதாகும். எனவே, 240* horsepower*–க்கு மேலாக இருக்கின்ற என்ஜின்கள், 24 மீட்டருக்குமேல் உள்ள விசைப் படகுகள் ஆகியவற்றைப் பதிவு செய்ய வேண்டுமெனில், 1983 ஆம் ஆண்டைய* Marine Fishing Regulation Act*–ஐத் திருத்தம் செய்வதன் மூலமாகத்தான் அதை நாம் அமல்படுத்த முடியும். அதுவும் அரசின் பரிசீலனையில் இருக்கின்றது. எனவே, மீனவர்கள் ஆழ்கடலுக்குச் சென்று மீன்பிடிப்பதற்கு வசதியாக அந்தச் சட்டம் திருத்தப்படும்போது இதுபோன்ற பிரச்சினைகளெல்லாம் எதிர்காலத்தில் இருக்காது என்ற ஒரு நம்பிக்கை இருக்கின்றது.*

## (ஆ) சென்னை, யானைக்கவுனி பாலப் பணிகள் விரைந்து முடித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு, என்ன, சொல்லுங்கள்.*

***திரு. பி.கே. சேகர்பாபு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். மேம்பால நாயகன் எங்கள் ஆருயிர்த் தளபதி அவர்களுக்கு வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) வரன் பார்க்காமலேயே நிச்சயதார்த்தத்தை முடிவு செய்வதுபோல், அரிசி இல்லாமலேயே உலை வைப்பதுபோல், அஸ்திவாரம் தோண்டாமலேயே கிரகப்பிரவேசத்திற்கு நாள் குறிப்பதுபோல், நயினார் பாலம் என்று சொல்லப்படுகின்ற யானைக்கவுனி பாலத்தில் 2016 ஆம் ஆண்டே இரயில்வே துறை போக்குவரத்தைத் தடை செய்துவிட்டது. 2016 ஆம் ஆண்டு முடிந்து 2017 கடந்து, தற்போது 2018–ஐ நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. திரும்பவும் 2019–ஐ நோக்கிச் செல்லாமல், இந்த 2018 ஆம் ஆண்டு இறுதிக்குள்ளாவது இந்தப் பாலப் பணியை விரைந்து முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதற்குத்தான் இந்தக் கவன ஈர்ப்பு.*

*இந்த யானைக்கவுனி மேம்பாலம் வால்டாக்ஸ் ரோடு, இராஜா முத்தையா சாலையை இணைக்கின்ற பாலம். கிட்டத்தட்ட பூந்தமல்லி நெடுஞ்சாலைத் தொடங்கி இந்தப்புறம்*